**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் புதன்கிழமை

**O.S. No.137/2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.2 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகசுந்தரம் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | சுப்பையன் | கிராமம் | : | நாலாங்கட்டளை |
| | | | தொழில் | : | (ஓய்வு) |
| | | | வயது | : | 68 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு சாட்சிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

தாவப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 1,2 பிரதிவாதிகள் வாதியின் இடத்தில் இடையூறு செய்து வந்ததால் அதன் காரணமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி ஷேக் அலாவுதீன் என்பவருடன் கிரய உடன்படிக்கை செய்து கொண்டு அதனடிப்படையில் கிரய ஒப்பந்தம் செய்வதற்கு முயற்சி செய்தார்களா என்றால் முயற்சி செய்தார்கள். அவ்வாறு வாதி முயற்சி செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவினை வாதி ரத்து செய்ய கோரி வட்டாட்சியரிடம் மனு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் மனு கொடுத்தது தெரியும். அதன் விபரங்கள் எனக்கு தெரியாது. வாதி எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு காலாவதி தோஷத்தால்

பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் வாதி எனது சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.11 18:14:27 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.